17. கபினற்வகை அடைப்பொறியில் பேணப்பட வேண்டிய உத்தம வெப்பநிலை, சாரீரப்பதனை குறிப்பது,

(1) 40 – 42$^0$c; 50%  (2) 30 – 35$^0$c; 40%  (3) 27 – 32$^0$c; 60%

(4) 35 – 42$^0$ c ; 40%  (5) 37 – 39$^0$c – 60%

18. வணிகத்திட்டம் ஒன்றின் பிரதான கூறுகளாக **அமையாதது**,

(1) நிதித்திட்டம், மனிதவள முகாமை, விற்பனைத்திட்டம்

(2) தொழினுட்பதிட்டம், சந்தைப்படுத்தல் திட்டம், நிதித்திட்டம்

(3) முதலீட்டு திட்டம், விற்பனைத் திட்டம், உற்பத்தி திட்டம்

(4) மனித வளமுகாமை, மேம்படுத்தல் நுட்பம், உற்பத்தித் திட்டம்

(5) சந்தைப்படுத்தல் திட்டம், விற்பனைத் திட்டம், நித்திட்டம்

19. உணவு பழுதடைதலிற்கு காரணமாக அமையும் பௌதீக காரணியாக அமைவது

(1) நொதியத் தொழிற்பாடு  (2) நீர்ச்சதவீதம்  (3) அடங்கும் போசணையின் அளவு

(4) PH பெறுமானம்  (5) ஈரலிப்பு (RH)

20. பசுக்கன்று ஒன்றினது இரைப்பையில் அதிக கனவளவுடைய பகுதி,

(1) துந்தம்  (2) சிறுவலை  (3) அசையூண்வயிறு

(4) உண்மை இரைப்பை  (5) முன்சிறுகுடல்

21. செயற்கையான வாழிடம் ஒன்றில் பிறப்புரிமை வளங்களைக் காப்பச் செய்தல்

(1) உள் நிலைக்காப்பு  (2) பரம்பரையலகுக் காப்பு  (3) வெளிநிலைக்காப்பு

(4) In – Vivo காப்பு  (5) Ex – Vivo காப்பு

22. எல்லை உச்சமல்லாத (Non climetic) கூட்டத்தில் அடங்கும் பழவகை.

(1) வாழை  (2) ஆணைக்கொய்யா  (3) மா  (4) மர முந்திரிகை  (5) கொய்யா

23. கீற்றோசிசு நோயை ஏற்படுவதைத் தவிர்க்க பசுவிற்கு வழங்க வேண்டிய இரசாயன சேர்வைகள்

(1) டை கல்சியம் பொசுபேற்று, கல்சியம் புரொப்பியோனேற்று

(2) சோடியம் புரோப்பியனேற்று, புரோப்பிபிலிசு கிளைக்கோல்

(3) சோடியம் பை காபனேற்று, புரோப்பிலின் கிளைக்கோல்

(4) டை கல்சியம் பொசுபேற்று, நயாசின்

(5). சோடியம் பைகாபனேற்று, நயாசின்

24. கலப்பு பிறப்புரண் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. இயல்புகள் பெற்றோரை விட மேம்பட்டதாக இருக்கும்.

B. இயல்புகள் சந்ததி சந்ததியாகக் கடத்தப்படும்.

C. தேர்வு முறையில் இனவிருத்தி செய்யும் போது உருவாகும்

(1) A மட்டும்  (2) B மட்டும்  (3) A, B மட்டும்

(4) B, C மட்டும்  (5) A, B, C எல்லாம்

25. புறொயிலர் கோழி ஒன்றின் நிறை 35 நாட்களில் 3 கிலோகிராமாக அதிகரித்துக் காணப்பட்டது. அதன் உணவு மாற்றீட்டு விகிதம் 1.5 எனில், அக்கோழி 35 நாட்களில் உட்கொண்ட உணவு,

(1) 0.6 கிலோ கிராம்  (2) 1.2 கிலோ கிராம்  (3) 4.5 கிலோ கிராம்

(4) 5.4 கிலோ கிராம்  (5) 6 கிலோகிராம்

26. விலங்குகளில் காணப்படும் நோய்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. யோக்சக்  B. கம்போரா  C. கால் - வாய் நோய்

D. பாற்காய்ச்சல்  E. ரனிக்கற்

தரப்பட்டுள்ள நோய்களில் வைரசு காரணமாக பறவைகளில் ஏற்படக்கூடிய நோய்கள்,

(1) A, Bமட்டும்  (2) B, Cமட்டும்  (3) C, Eமட்டும்

(4) B, Eமட்டும்  (5) A, B, Eமட்டும்